ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி
# 1.10 – வட்டுநடுவே

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 1.10 – வட்டுநடுவே

‡ வட்டு நடுவே ⋆ வளர்கின்ற ⋆ மாணிக்க
மொட்டு நுனையில் ⋆ முளைக்கின்ற முத்தே போல் ⋆
    சொட்டுச் சொட்டென்னத் ⋆ துளிக்கத் துளிக்க ⋆ என்
குட்டன் வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
    கோவிந்தன் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.1** ॥

கிங்கிணி கட்டிக் ⋆ கிறி கட்டி ⋆ கையினில்
கங்கணம் இட்டுக் ⋆ கழுத்தில் தொடர் கட்டி ⋆
    தன் கணத்தாலே ⋆ சதிரா நடந்து வந்து ⋆
என் கண்ணன் என்னைப் புறம் புல்குவான் ⋆
    எம்பிரான் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.2** ॥

கத்தக் கதித்துக் ⋆ கிடந்த பெருஞ்செல்வம் ⋆
ஒத்துப் பொருந்திக் கொண்டு ⋆ உண்ணாது மண் ஆள்வான் ⋆
    கொத்துத் தலைவன் ⋆ குடி கெடத் தோன்றிய ⋆
அத்தன் வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
    ஆயர்கள் ஏறென் புறம் புல்குவான் ॥ **1.10.3** ॥

நாந்தகம் ஏந்திய ⋆ நம்பி சரண் என்று ⋆
தாழ்ந்த தனஞ்சயற்காகி ⋆ தரணியில் ⋆
    வேந்தர்கள் உட்க ⋆ விசயன் மணித் திண் தேர் ⋆
ஊர்ந்தவன் என்னைப் புறம் புல்குவான் ⋆
    உம்பர் கோன் என்னைப் புறம் புல்குவான் ॥ **1.10.4** ॥

வெண் கலப் பத்திரம் ⋆ கட்டி விளையாடி ⋆
கண் பல செய்த ⋆ கருந்தழைக் காவின் கீழ் ⋆
    பண் பல பாடிப் ⋆ பல்லாண்டிசைப்ப ⋆ பண்டு
மண் பல கொண்டான் புறம் புல்குவான் ⋆
    வாமனன் என்னைப் புறம் புல்குவான் || **1.10.5** ||

சத்திரம் ஏந்தித் ⋆ தனி ஒரு மாணியாய் ⋆
உத்தர வேதியில் ⋆ நின்ற ஒருவனை ⋆
    கத்திரியர் காணக் ⋆ காணி முற்றும் கொண்ட ⋆
பத்திராகாரன் புறம் புல்குவான் ⋆
    பார் அளந்தான் என் புறம் புல்குவான் || **1.10.6** ||

பொத்த உரலைக் கவிழ்த்து ⋆ அதன் மேல் ஏறி ⋆
தித்தித்த பாலும் ⋆ தடாவினில் வெண்ணெயும் ⋆
    மெத்தத் திருவயிறார ⋆ விழுங்கிய ⋆
அத்தன் வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
    ஆழியான் என்னைப் புறம் புல்குவான் || **1.10.7** ||

மூத்தவை காண ⋆ முது மணல் குன்றேறிக் ⋆
கூத்துவந்தாடிக் ⋆ குழலால் இசை பாடி ⋆
    வாய்த்த மறையோர் வணங்க ⋆ இமையவர்
ஏத்த வந்தென்னைப் புறம் புல்குவான் ⋆
    எம்பிரான் என்னைப் புறம் புல்குவான் || **1.10.8** ||

கற்பகக் காவு ⋆ கருதிய காதலிக்கு ⋆
இப்பொழுதீவன் என்று ⋆ இந்திரன் காவினில் ⋆
    நிற்பன செய்து ⋆ நிலாத் திகழ் முற்றத்துள் ⋆
உய்த்தவன் என்னைப் புறம் புல்குவான் ⋆
    உம்பர் கோன் என்னைப் புறம் புல்குவான் || **1.10.9** ||

‡ ஆய்ச்சி அன்றாழிப் பிரான் ⋆ புறம் புல்கிய ⋆
    வேய்த் தடந்தோளி சொல் ⋆ விட்டுசித்தன் மகிழ்ந்து ⋆
ஈத்த தமிழ் இவை ⋆ ஈரைந்தும் வல்லவர் ⋆
    வாய்த்த நன் மக்களைப் பெற்று ⋆ மகிழ்வரே ॥ **1.10.10** ॥

அடிவரவு — வட்டு கிங்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் சத்திரம் பொத்த மூத்தவை கற்பகம் ஆய்ச்சி மெச்சூது

வட்டுநடுவே முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்